செ.வெ.எண் - 963

# தமிழ்நாடு மின்சார வாரியம்

செய்திக் குறிப்பு நாள் : 14.12.2009

## எரிசக்தி சேமிப்பு - மின்சார சிக்கன வாரம் - 2009

எரிசக்தி சேமிப்பு தொடர்பாக அகில இந்தியா முழுவதும் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 14ம் தேதி முதல் 20ம் தேதி வரை எரிசக்தி சேமிப்பு விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது இது தொடர்பாக தமிழகத்திலும் மின்சார வாரியத்தின் சார்பாக மின்சார சிக்கன விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டு பொதுமக்களிடையே மின் சிக்கனத்தை வலியுறுத்தி பல்வேறு நிகழ்ச்சிகள் டிசம்பர் 14 ஆம் தேதி முதல் டிசம்பர் 20ஆம் தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 14-ஆம் தேதி, தொடக்க விழா நிகழ்ச்சியாக காலை 7 மணியளவில் மின்சார சிக்கன விழிப்புணர்வு ஓட்டம் சென்னை மெரினா கடற்கரையில் லைட்அவுஸ் முதல் அண்ணா சதுக்கம் வரை நடைபெற உள்ளது. இதை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.நா.ஆற்காடு வீராசாமி அவர்கள், துவக்கி வைக்க இசைவு தந்துள்ளார்கள். இதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மின்சார வாரிய அதிகாரிகள், அலுவலர்கள், மற்றும் பணியாளர்கள் கலந்து கொள்வார்கள்.

இதன் தொடர்ச்சியாக, டிசம்பர் 14ஆம் தேதி சென்னை மின்பகிர்மான மைய வட்டத்தின் சார்பாக வள்ளுவர் கோட்டம் அருகே மின் சக்தி சேமிப்பு விழிப்புணர்வு வாசகங்களுடன், மின் சிக்கன மனித சங்கிலி நடைபெற உள்ளது.

இதைத் தொடர்ந்து டிசம்பர் 15ந் தேதி, சென்னை மின் பகிர்மான மேற்கு வட்டத்தின் சார்பாக திருமங்கலத்தில், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பும்,

டிசம்பர் 16-ந் தேதி, சென்னை மின் பகிர்மான தெற்கு வட்டத்தின் சார்பாக கே.கே.நகரிலும்,

டிசம்பர் 17-ந் தேதி, செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின் சார்பில் செங்கல்பட்டிலும், மின்சார சிக்கன வாரவிழாவின் நிறைவு நாளான டிசம்பர் 19-ந்தேதி சென்னை மின் பகிர்மானவடக்கு வட்டத்தின் சார்பாக, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகம் முன்பாக அண்ணசாலையிலும், மனித சங்கிலி நடைபெற உள்ளது.

மேலும் தமிழகம் முழுவதும் உள்ள மின் விநியோக பகிர்மான வட்டங்களிலும், மின்சார சிக்கனத்தை வலியுறுத்தி நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. மேலும் இது தொடர்பாக அந்தந்த வட்டங்களில் உள்ள பள்ளி,கல்லூரிகளில் மின்சார சிக்கனத்தை வலியுறுத்தும் வண்ணம் கட்டுரை போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். மேலும் சென்னையில் மின்சார சிக்கன விழிப்புணர்வு வார விளம்பரப் பலகைகள் வைக்கப்பட உள்ளன. துண்டு பிரசுரமும் விநியோகிக்கப்படும். பி.எஸ்.என்.எல் மூலமாக குறுஞ்செய்திகள் அலைபேசியில் வெளியிடப்படும்.

ரயில்வே பயண டிக்கெட்டுகளில் மின்சார சிக்கனம் குறித்த வாசகங்கள் அச்சிடப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மின்சார சிக்கன வாரவிழா குறித்து பொது மக்களை கவரும் வண்ணம், ராட்சத பலூன்கள் பறக்க விடப்படுகின்றன. மேலும், பன்பலை அலைவரிசைகளிலும், வானொலியிலும், மின்சார சிக்கனம் பற்றி ஒலிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும், மின்சார சிக்கனத்தை கடைபிடித்தும், ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி
தமிழ்நாடு மின்சார வாரியம்
CHIEF PUBLIC RELATIONS OFFICER,
TAMIL NADU ELECTRICITY BOARD,
144, ANNA SALAI, CHENNAI - 600 002.